பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 06 வியாழக்கிழமை 20.03.2025 கதிர் 132

### இது ரகசியம் அல்ல!

தெற்கில் தேசிய மக்கள் சக்தியின் மீதான ஆர்வத்திலிருந்து மக்களை மீட்டெடுக்க என்ன செய்யலாம் என்பதில் அரசியல் கட்சிகள் மண்டையைப் பிய்த்துக் கொள்கின்றன. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முக்கிய இடங்களிலாவது, கொழும்பு மாநகர சபை போன்றவற்றிலாவது தமது ☞2

# சகல சபைகளையும் தனித்தே வெல்லத்தான் பாடுபடுகிறோம்

## தமிழ் அரசுக் கட்சியின் செயலர் தெரிவிப்பு

**வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தனித்து ஆட்சி அமைப்பதற்காகத்தான் பாடுபடுகின்றோம். இந்தத் தேர்தல் முறைமையிலே எந்த கட்சியாக இருந்தாலும் தனித்து ஆட்சியமைப்பது கடினம் என்பது தெரிந்தவிடயம். இருந்தாலும் தனித்து வெல்வதற்கான முழு முயற்சியையும் செய்கின்றோம். தமது பிரதேச சபைகளில் உறுதியான, பலமான ஆட்சி அமைவதற்காக மக்கள்**



**அனைத்துத் தொகுதிகளில் தமிழ்** ☞2

## உள்ளூராட்சித் தேர்தல் திகதி இன்று அறிவிப்பு

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கானதிகதி இன்று அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதி நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது. அதேநேரம் வேட்புமனுக்கள் இன்று நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்தநிலையில், நேற்றைய தினம் மொத்தமாக 21 கட்சிகளும் 15 சுயேச்சை குழுக்களும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களில் வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், அவற்றை முன்வைக்க இன்று ஒன்றரை மணி நேரம் அவகாசம் வழங்கப்படும். ☞8

## கொள்கையில் உறுதியான எம்மை பலப்படுத்துவது காலத்தின் கட்டாயம்

### கஜேந்திரகுமார் அறிவிப்பு

கொள்கையில் உறுதியாக பயணிக்கக்கூடிய எம்மை பலப்படுத்துவது காலத்தின் கட்டாயம் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 9 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த பின்னர் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்



இருக்கின்ற ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கு இன்று வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளோம். ☞2

## பட்டலந்த குற்றவாளிகளுக்கு அரசு தண்டனை வழங்குவது சந்தேகமே

### மரிக்கார் எம்.பி. இடித்துரைப்பு

பட்டலந்த தொடர்பில் தேடும்போது இலங்கை முழுவதும் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாகவும் ஆளும்தரப்புத் தேட வேண்டும். அதனால் சித்திரவதை முகாமுடன் தொடர்புடைய குற்றவாளிக்கு இந்த ஆளும்தரப்பு தண்டனை வழங்கும் என்பது சந்தேகமே. அந்தளவுக்கு அவர்களுக்குள் டீல் இருக்கிறது எனறு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞8

## ஒரே ஒரு நாளுக்குப் போதுமான நெல்கூட வாங்கப்படவேயில்லை

### அம்பாந்தோட்டை எம்.பி. சுட்டிக்காட்டு

இலங்கையில் ஒரே ஒரு நாளுக்குப் போதுமான நெல்லைக்கூட ஆளும்தரப்பு இம்முறை கொள்வனவு செய்யவில்லை என அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சானக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஆளும்தரப்பு இதுவரை எவ்வளவு மெட்ரிக் டொன் நெல்லைக் கொள்வனவு செய்துள்ளது? ஆளும்தரப்பிடம் நெல் இல்லாத காரணத்தாலேயே அரிசியின் விலை அதிகரித்துச் செல்வதாக அன்று குற்றம் சுமத்தினீர்கள். எமக்குக் ☞8

## சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டத்தை ஏற்கமுடியாது

### அரசுத் தலைவர் அடியோடு நிராகரிப்பு

தொழிற்சங்கங்களின் கோரிக்கையோ அழுத்தமோ இன்றி வரலாற்றில் ஆளும்தரப்பினால் மிகக் கூடிய சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் சுகாதார தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை ஏற்கமுடியாது என்று அரசுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவிற்கும் அரசசேவை ஐக்கிய தாதியர் சங்கத்திற்கு இடையிலான சந்திப்பு நேற்று அரசுத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வரையறுக்கப்பட்ட செலவுகளுக்கு உட்பட்டிருக்கும் தற்போதைய பொருளாதார நிலையிலும் கூட அரச சேவையை வினைத்திறனாக முன்னெடுத்தல், தகைமையுள்ள நபர்களை அரச சேவைக்கு ஈர்த்துக்கொள்ளல் மற்றும் அரச சேவையை ஊக்குவிப்பதற்காக இம்முறை வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்தல் என்பன தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. ☞2

### பட்டலந்த படுகொலைகள் விசாரணை போன்றே

## தமிழ் இனப்படுகொலை குறித்தும் விசாரணை நடத்தப்படவேண்டும்

### சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

பட்டலந்த படுகொலைகள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும். அதுபோலவே தமிழ் இனப்படுகொலை குறித்தும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத்



தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞8

### அர்ஜுன் ஆலோசியஸிற்கு எதிரான

## காகிதாதி மோசடி வழக்கிற்கு ஏப்ரல் 30 அடுத்த தவணை

அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஏப்ரல் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செய்தித்தாள் அச்சிடுவதற்கான காகிதங்களை வாங்கியதன் மூலம் 12 மில்லியன் ரூபாயை மோசடி செய்தனர் எனக் கூறி, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனாவல முன்னிலையில் இன்று இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ☞2

## வறுமைக் கோட்டை மதிப்பிடும் முறையில் பல பிழைகளுண்டு

### எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் கருத்து

வறுமைக் கோட்டை மதிப்பிடும் முறைமையில் பல பிழைகள் காணப்படுகின்றன. இது குறித்து ஆராய்ந்து, தரவு மையக் கொள்கைகளை வகுக்க வேண்டும். தவறான தரவுகளின் அடிப்படையில் அரச கொள்கைகள் வகுக்கப்பட்டால், சகலதுமே சீர்குலையும்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தின் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு ☞8

## இனி இது .....

கையோங்கவழிஏற்படுத்தினால்அதுஎதிர்கால அரசியலுக்கு வலுவான அடித்தளம் இடும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். இதற்காக எதனைச்செய்தால் அதிக இலாபமடையலாம் என்பதில் அவர்களின் முழு முயற்சிகளும் திருப்பிவிடப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில்எதிர்க்கட்சியில்அங்கம் வகிக்கும்சிலகட்சிகளின்உறுப்பினர்களுக்கும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் இது விடயமாக நேற்று சந்தித்துப் பேசியுள்ளனர். கொழும்பு - ஃப்ளவர் வீதியிலுள்ள முன்னாள் அரசுத் தலைவர்யின் கட்சி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் முன்னாள் அரசுத் தலைவர் மைத்ரிபால சிறிசேனவும் கலந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் உள்ளுராட்சி மன்றத் தேர்தல், நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக எழுந்துள்ள கருத்தாடல் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டதாக குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

......................

வடக்கு மாகாண அரசியல் களத்தில் புதிய அரசியல் பெயரில் கூட்டு உருவாகியுள்ளது. இந்தப் பெயர் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்தாலும் இப்போது அது அரசியல் களத்திற்குள் மீண்டும் இழுத்து வரப்பட்டுள்ளது.

2015 நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு, அதில் தோல்வியடைந் தரப்புக்கள், அப்போது தமிழ் அரசுக் கட்சியோடு முரண்பட்டு நின்ற முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்றவகையில் மருத்துவர்களையும் உள்ளடக்கி தமிழ் மக்கள் பேரவை என்ற ஒன்றை உருவாக்கின என்பது வாசகர்கள் அறிந்ததே. அந்தப் பேரவை செயற்பட்ட காலத்திலேயே விக்னேஸ்வரன் தமது கட்சியுடன் சேர்ந்துகொள்ளவேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியது. ஆனால் விக்னேஸ்வரன் தனக்கென ஒரு தனி விருப்பு வைத்திருந்ததால் அந்த அழைப்பை உதாசீனம் செய்தார். அத்தோடு தமிழ் மக்கள் பேரவையை வைத்து தனது தனி அரசியலை உறுதிப்படுத்துவதில் அவரது கவனம் இருந்தது. இதனால் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் பேரவையில் இருந்து உதிர்ந்தன.

தமிழ் மக்கள் பேரவையை தமது அரசியல் நலனுக்குப் பயன்படுத்த முடியாத நிலையில், அதனை விக்னேஸ்வரன் மட்டுமே தனக்குரியதாக அபகரித்துக்கொள்ளும் நிலையை அவர்களால் சகிக்க முடியவில்லை. அதனால் அந்தப் பேரவையைவிட்டு வெளியேறியதும் அந்தப் பேரவையின் உருவாக்கத்திற்கும் அதன் வழி நடந்த அரசியல் பேரணிகளுக்கும் தாம்தான் காரணமானவர்கள் என்றும் உரிமை கோர விளைந்த தமிழ்த் தேசிய முன்னணியினர் தமிழ் மக்கள் பேரவையின் பெயரையொட்டியதாக தமிழ் தேசியப் பேரவை என்ற ஒன்றைக் கட்டியெழுப்ப முயன்றார்கள். அந்த முயற்சி பிசுபிசுத்துப் போனது. யாரும் அந்தப் பேரவையைக் கண்டுகொள்ளவில்லை. அதனால் அந்தப் பெயர் கிடப்பில் போடப்பட்டது.

அதன் பின்னர் ஒரு தடவை அந்தப் பெயர் அரசியல் சந்தைக்கு இழுக்கப்பட்டது. ஆனால், அப்போதும் அது பெரியளவில் கவனிக்கப்படவில்லை. 2024 ஜனாதிபதித் தேர்தலில் பொது அமைப்புக்களும் 7 தமிழ் அரசியல் கட்சிகளும் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கியபோது அதற்கு தமிழ்த் தேசியப் பேரவை என்று பெயர் வைக்க முயன்றார்கள். செய்தியாளர்கள் கூட்டம் ஒன்றில் அந்தப் பெயரையும் அறிவித்தார்கள். அப்போது இது தங்களுடைய பெயர் என்று முன்னணியினர் உரிமை கோரினர். அதனால் பின்னர் அந்தப் பெயரை தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்று மாற்றினார்கள். அந்தக் கட்டமைப்பு வந்த வேகத்தில் காற்றில் கரைந்து மறைந்துபோனது என்பது வரலாறு.

இப்படி இதுவரையில் கவனிப்பாரின்றி, மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாது கிடப்பில் இருந்த தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரைத்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் காங்கிரஸுடன் மற்றைய மூன்று தரப்புக்கள் சேர்ந்து ஏற்படுத்தியுள்ள கூட்டுக்கு இப்போது வைத்துள்ளார்கள். இந்தப் பெயர் பற்றிய அறிவிப்பை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த தமிழ்த் தேசியப் பேரவையில் இப்போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகத் தமிழ் அரசுத் தரப்பினரில் நாவலன் குழுவினர், ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகியன சேர்ந்துள்ளன என்று கஜேந்திரகுமார் தெரிவித்தார். ஏற்கனவே உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு என்ன நடந்தது என்பதை அவர் சொல்லவில்லை. அந்த முன்னணியின் செயலாளரான கஜேந்திரனையும் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்த குழுவினரில் காணவில்லை. தேர்தல் பணிகள் காரணமாகவும் அவர் வராதிருந்திருக்கக்கூடும். அல்லது முன்னர் ஒரு தடவை முன்னணி ஒரு தேர்தல் கூட்டு அல்ல, அதுவொரு மக்கள் இயக்கம்தான் அதனால் அதனை அரசியல் கட்சியாக ஒருபோதும் பதியமாட்டேன் என்று அறிவித்திருந்தார் கஜேந்திரகுமார். ஒருவேளை அதனாலேயே தூசு தட்டி எடுக்கப்பட்ட இந்தக் கூட்டில் முன்னணி சேர்த்துக்கொள்ளப்படவில்லையா என்பதற்கான விளக்கத்தை ஒருவேளை கஜேந்திரகுமார் இன்று வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் அறிவிப்பாராக இருக்கும்.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாநகர சபை வேட்பாளர் பட்டியலில் அதன் முன்னாள் மேயர் ஆர்னோல்ட் மீண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளார் என்று உறுதியாக அறியமுடிகின்றது. வேட்பாளர் தெரிவு தொடர்பான மாவட்டக் கிளைக் கூட்டத்தில் அவரை உள்ளடக்குவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனாலும் எப்படியும் கடைசி நேரத்தில் அவர் தனது பெயரைப் பட்டியலில் உள்நுழைத்துவிடுவார், அவ்வளவு இலகுவில் விட்டுக்கொடுத்துவிட மாட்டார் என்ற நிச்சயமான எண்ணம் கட்சி உறுப்பினர்களுக்கு மத்தியிலேயே இருந்தது. கடைசியில் அதுதான் உண்மையென்றாகிவிட்டது. ஏதோ ஒரு வழியில் பட்டியிலில் அவர் தனது பெயரையும் உள்ளடக்கிவிட்டார். இனி மேயர் தெரிவின்போது என்ன நடக்கியது என்று பார்க்கலாம்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## சகல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக் கட்சியை வெல்ல வைக்கவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களை நேற்றுத் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வளவு காலமும் தாங்கள் மட்டுமே புனிதமானவர்கள் என்று தேர்தலில் போட்டி போட்டுக் கொண்டிருந்தவர்கள் தங்கள் நிலைமையை உணர்ந்து ஒரு சிலரோடு சேர்ந்து தேர்தலில் போட்டியிடுகின்றனர்

இப்படியாகத்தான் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் ஒன்பது கட்சி கூட்டு, பத்து கட்சிக் கூட்டு எனப் பல செய்திகள் கூட்டுகள் வந்தன. அந்தக் கூட்டுக்களில் இருந்து தப்பித தவறி ஒருவர் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினராக வந்தார். எனவே இந்தக் கூட்டுக்கள் எல்லாம் உள்ளாட்சித் தேர்தலில் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்திருக்கிறோம். மிகுதி 12 சபைகளுக்கான வேட்புமனுக்களை நாளை (இன்று) காலை சமர்ப்பிப்போம்.

நிறைந்த போட்டியின் மத்தியிலேயே வேட்பாளர்களை தெரிவுசெய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் வேட்புமனுக்களை இறுதி செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

கட்சியினுடைய தீர்மானத்தின் படி எந்த ஒரு சபைக்கும் முதல்வரோ தவிசாளரோ அறிவிக்கப்படப் போவதில்லை. தேர்தலுக்கு பிறகு தான் அது சம்பந்தமாக கட்சி முடிவு எடுக்கும்.

# வெளிநாட்டு மதுபானங்களுடன் துப்பாக்கியும் தேசபந்துவின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது

## நாடாளுமன்றில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

ஹோகந்தர பகுதியில் உள்ள தேசபந்து தென்னகோனின் வீட்டை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் சோதனையிட்டபோது 1009 மதுபான போத்தல்களுடன் ஒரு துப்பாக்கி, இரண்டு ஆப்பிள் ரக தொலைபேசிகளையும் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023.12.31ஆம் திகதி வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலா ஹோட்டலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பத்துடன் தொடர்புடைய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 6 பேரை கைது செய்வதற்கு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தொடர்பில் நாட்டு மக்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் சொத்துக்களை அரசுடமையாக்குவது தொடர்பில் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்துக்கு விடயங்களை முன்வைப்பதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் இன்று (நேற்று) மாத்தறை நீதிவான் நீதிமன்றத்துக்கு சென்றிருந்தனர். இந்நிலையில் தேசபந்து தென்னகோன் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

ஹோகந்தர பகுதியில் உள்ள தேசபந்து தென்னகோனின் வீட்டைக் குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று (நேற்றுமுன்தினம்) சோதனையிட்டபோது வெளிநாட்டு மதுபான போத்தல்கள் 795, வைன் போத்தல்கள் 214 உட்பட 1009 மதுபான போத்தல்களை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அதேபோல் தேசபந்து தென்னகோன் பயன்படுத்தினார் எனக் கருதப்படும் துப்பாக்கி ஒன்றும் இரண்டு ஆப்பிள் வகையான ஸ்மார்ட் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்படும் என்றார்.

உள்ளூராட்சி சபைகளில் தனித்து ஆட்சி அமைக்க முயற்சிக்கிறோம். ஆனால் எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்தத் தேர்தல் முறைமையிலே எந்தக் கட்சியாக இருந்தாலும் தனித்து ஆட்சியமைப்பது கடினமான விடயம். ஆனாலும் நாங்கள் முயற்சிசெய்கிறோம். எமக்குப் பெரும்பான்மை கிடைக்காத இடங்களில் வேறு யாருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கிறது என்பதைப் பொறுத்து அதை நாங்கள் தீர்மானிப்போம் - என்றார்.

## காகிததாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அர்ஜுன் அலோசியஸ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரருக்கு இன்றுவரை குற்றப்பத்திரிகைகள் வழங்கப்படவில்லை என்று கூறினார்.

இதன்படி,வழக்கை ஏப்ரல் 30 மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் சந்தேகநபரிடம் குற்றப்பத்திரிகையை ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 06 முறைமைகளில் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மிகக் குறைந்த அடிப்படை சம்பளத்தை 15 000 ரூபாவினால் அதிகரித்தல், மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரித்தல் , விடுமுறை நாள் கொடுப்பனவை அதிகரித்தல், 80% வருடாந்த சம்பளத்தை அதிகரித்தல், முழுமையான சம்பள அதிகரிப்பிற்கு அமைய ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரித்தல் மற்றும் உழைக்கும்போது செலுத்தும் வரி எல்லையை அதிகரித்தல் என்பவற்றை மேற்கொண்டுள்ளது - என்றார்.

கொழும்பு பல்கலைக்கழக வேந்தர், மேல் மாகாண தலைமை சங்க நாயக்கர், அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவருமான வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சிலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## கொள்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய எட்டு உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களை நாளை (இன்று) மதியத்திற்குள் தாக்கல் செய்வோம்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பு முழுவதற்கும் தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தக்கூடிய அத்தனை சபைகளுக்கும் சைக்கிள் சின்னத்தில் தமிழ் தேசிய பேரவை என்ற பெயரில் எங்களுடைய கூட்டணியை உருவாக்கியுள்ளோம்.

இந்த முயற்சி கொள்கை அடிப்படையில் எங்கள் மட்டத்திலே ஏற்பட்ட இணக்கப்பாடு காரணமாக முன்னெடுக்கப்படுகிறது. எம்மைப் பொறுத்தவரையிலே கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிற்பாடு தமிழ்த் தேசிய அரசியலை பலப்படுத்த வேண்டிய ஒரு கட்டாயத் தேவை தென்படுகின்றது.

அந்த வகையிலே தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ் தேசியக்கூட்டணியுடன் பேச்சு நடத்தியிருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக, தமிழ் அரசுக் கட்சி ஒருதலைப் பட்சமாக எந்த விதமான நியாயமும் இல்லாமல் கொள்கையளவிலே இணக்கப்பாட்டை இந்தப் பேச்சை முறித்தது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியினுடைய தலைவரோடு நாங்கள் பேச்சு நடத்திக்கொண்டிருந்தாலும்கூட அவருடைய அந்தக் கூட்டணி எங்களைத் தவிர்த்து தமிழ்த் தேசியத்துக்கு மாறாகச் செயற்பட்ட ஒரு சில தரப்புகளையும் சேர்த்துக் கூட்டணி முயற்சியொன்றை எடுக்க ஆரம்பித்தார்கள்.

அந்தப் பின்னணியில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி வரவு செலவுத் திட்டம் தொடர்பான வாக்கெடுப்புக்கு ஆதரவு வழங்கியது, உள்ளிட்ட சில குறிப்பிட்ட காரணங்களால் தமிழ் தேசியக் கட்சி அதிருப்தி அடைந்து கொள்கை வழியிலேயே எங்களோடு சேர்ந்து பயணிக்க விரும்பியது. நாங்களும் அதனை விரும்பினோம்.

ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சியினுடைய உறுப்பினர்களும் எங்களுடன் சேர்ந்து பயணிப்பதற்குப் பேச்சு நடத்தினார்கள். அவர்களும் தற்போது ஒன்றாக பயணிக்க முடிவெடுத்திருக்கிறார்கள்.

ஐங்கரநேசனுடைய தமிழ் தேசிய பசுமை இயக்கமும் எங்களுடன் இணைந்துள்ளது.

அதேபோன்று அருந்தவபாலன், தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கப்போவதாக அறிவித்திருந்தாலும்கூட அவரும் இந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னரான தமிழ் தேசிய நிலைப்பாட்டில் ஒற்றுமையாகப் பயணிப்பதற்கு முயற்சி ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று விரும்பினார். அந்த வகையிலே எங்களுடைய இந்த முயற்சியோடு அவரும் சேர்ந்து பயணிக்கவேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் நாங்கள் ஒரு கூட்டணியை ஆரம்பித்துள்ளோம். இந்த முயற்சி எதிர்காலத்தில் பலமடையும் என்று நம்பிக்கையிலே நாங்கள் இருக்கின்றோம்.

கொள்கைஅடிப்படையில் இந்த முயற்சியை நாங்கள் முன்கொண்டு செல்வோம்.

இந்தக் கூட்டு முயற்சியை நாங்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# திருமலை தமிழ் அரசு வேட்பாளர்கள் நேற்று வேட்புமனுவில் கையொப்பம்

(ஹஸ்பர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிடுவதற்காக திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த வேட்பாளர்கள் வேட்பு மனுவில் நேற்றுக் கையொப்பம் இட்டனர்

தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளை காரியாலயத்தில் இடம்பெற்ற வேட்பு மனுவில் கையெழுத்திடும் நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கலந்து கொண்டார்.



# தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை போட்டியில்லை

தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி அனுப்பி வைத்த கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்க்க முடியாத காரணத்தினால் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்ய முடியவில்லை என தெரிவிக்கிறோம் - என்றுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் ஆனந்தசங்கரியின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

# பெண் வேட்பாளரை தேடி இம்முறை காடுமேடெல்லாம் அலையவில்லை

## தமிழ் அரசுக் கட்சி செயலர் கருத்து

உள்ளூராட்சித் தேர்தலில் களமிறக்கப்படும் பெண் வேட்பாளர்களுக்காக இம்முறை காடு மேடெல்லாம் தேட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று தமிழ் அரசுக் கட்சிக்கு ஏற்படவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் பெண் வேட்பாளர்களைகண்டடையகாடுமேடெல்லாம் தேடவேண்டியிருந்தது என்று சுமந்திரனின் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், உள்ளூ-ராட்சித் தேர்தலில் நிலமை என்ன என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்

'இந்த முறை காடு மேடெல்லாம் தேட வேண்டி இருக்கவில்லை. உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஏற்கனவே 2023ஆம் ஆண்டே பட்டியலிடப்பட்டிருந்த நிலையில் கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக ஏற்கனவே வேட்புமனுத் தாக்கல் செய்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்முறை பெண் வேட்பாளர்களுக்காக காடு மேடெல்லாம் அலைய வேண்டிய தேவை இருக்கவில்லை' என்றார்

# யாழ்ப்பாணத்தில் 9 இடங்களுக்கு காங்கிரஸ் வேட்புமனுத் தாக்கல்

உள்ளாட்சித்தேர்தலில்போட்டியிடுவதற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று 9 இடங்களுக்கு வேட்பு மனு தாக்கல் செய்தது. மீதி 8 இடங்களுக்கும் இன்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்யவுள்ளது.



யாழ்ப்பாணம்மாவட்டசெயலகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கஜேந்திரகுமார்தலைமையில் வேட்புமனுக்கள்தாக்கல்செய்யப்பட்டன.

காங்கிரஸின் பட்டியலிற்குத் தமது சார்பில் பெயர்களை வழங்கியுள்ள தமிழ்த்தேசியக்கட்சியின்செயலாளரான சிவாஜிலிங்கமும் வேட்புமனுத் தாக்கலின்போது கஜேந்திரகுமாருடன் கூடவே வந்திருந்தார்.

# சம்மாந்துறை பிரதேச சபையை பெரும் வெற்றியோடு பிடிப்போம்

## உதுமான்கண்டு நாபீர் உறுதி

(அபு அலா)



உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுவினை (19) நாபீர் பவுண்டேஷனின் அரசியல் செயற்பாட்டாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துல்கர் நயீமைக் கொண்ட குழுவினர் இன்று அம்பாறை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சியாளர் அலுவலகத்தில் வேட்பு மனுவை கையளித்துள்ளனர்.

வேட்புமனுக் கையளிப்பின் பின்னர் சுயேச்சைக் குழுவின் தலைவர் உதுமான் கண்டு நாபீர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபையை இலக்காகக் கொண்டு களமிறங்கியுள்ள நாபீர் பவுண்டேஷன் சுயேச்சைக் குழு சம்மாந்துறை பிரதேச சபையை அறுதிப் பெரும்பான்மையினால் கைப்பற்றுவோம் என்று அதன் தலைவர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய கட்சிகள், சிறுபான்மை கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களென கூடுதலான கட்சிகள் களமிறங்கியுள்ள இந்நிலைமையில், எமது சுயேச்சைக் குழு அறுதிப் பெரும்பான்மையினால் சம்மாந்துறைப் பிரதேச சபையைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

கடந்த 32 வருட காலமாக எந்த எதிர்பார்ப்பின்றி நாங்கள் செய்த சேவையின் நிமித்தம், இன்று மக்களிடம் ஆணையைக் கேட்டு நிற்கின்றோம். இனம், மதம் கட்சி, வேதம் பாராமல் பரவலாக மக்களுக்கு செய்த சேவைகளின் அடிப்படையில் சம்மாந்துறை பிரதேச சபையை மையமாகக் கொண்டே நாங்கள் களமிறங்குகின்றோம். இந்த வெற்றியின் அடிப்படையில் எதிர்வருகின்ற காலங்களில் எமது அரசியல் பரலலடைந்து இன்னும் பல சேவைகளை எமது மக்களுக்கு வழங்கவுள்ளோம்.

கடந்த காலச் சேவைகளை அரசியலின் அடிப்படையில் வியாபிக்கவேண்டும் என்பதே எமது முழு இலக்காகக் காணப்படுகின்றது. அதற்காக எனது மக்கள் எனக்கான அரசியல் அதிகாரத்தை தருவார்கள் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கின்றது என்றார்.



# வவுனியா மாநகர சபைக்கும் காங்கிரஸ் வேட்புமனு தாக்கல்

வவுனியா மாநகர சபையில் போட்டியிட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று வேட்புமனு தாக்கல் செய்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடு மார்ச் 17 முதல் இடம்பெற்று வருகின்றது. கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்து வருகின்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்தலைமையில்,கூட்டணியின்வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் சகிதம் ஜனநாயகக் கூட்டணியினர் தமது வேட்புமனுவை கையளித்திருந்தனர். (100)

# வவுனியாவில் தமிழ் அரசுக் கட்சி நேற்று வேட்பு மனுக்கள் தாக்கல்

எதிர்வரும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வவுனியாவில் புதன்கிழமை தாக்கல் செய்தது.

வவுனியா மாநகரசபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேசசபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவையே தமிழ் அரசுக் கட்சி தாக்கல் செய்தது.

வேட்பு மனுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், மற்றும் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் முக்கியஸ்தர்கள் சகிதம் நேற்று மாலை கையளித்திருந்தார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ் அரசுக் கட்சி இம்முறை தனித்துப் போட்டியிடுகின்றது.

# சுயேட்சைக்குழு கிளிநொச்சியில் வேட்புமனு தாக்கல்

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று ஒரு சுயேச்சைக்குழு வேட்பு மனுவை தாக்கல் செய்தது.

கரைச்சி பிரதேச சபைக்கு போட்டியிடுவதற்காக சந்திரகுமாரன் ஸ்டீவென்சன் தலைமையிலான சுயேச்சைக்குழு இந்த வேட்பு மனுவை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் தாக்கல் செய்தது. (316)

# ஐரோப்பிய நாடு போல் எமது நாடு குறுகிய காலத்துக்குள் மிளிரும்

## ஆதம்பாவா எம்.பி. நம்பிக்கை

(றமீஸ்)

நம் நாட்டில் தற்பொழுது பல்வேறு துறைகளிலும் பல்வேறான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு துறைசார் மேம்படுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் நமது நாடு குறிப்பட்ட காலப் பகுதிக்குள் ஐரோப்பிய நாடுகளைப் போல் மக்கள் நலச் செயற்பாடுகள் உள்ள நாடாக மிளிரும் . அப்போது நம் நாட்டு மக்கள் அனைத்துத் துறைகளிலும் வலுப்பெற்றவர்களாக வாழும் சூழல் ஏற்படும் என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தெரிவித்தார்.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்பிரிவுஅரிசிஆலைஉரிமையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் 'இப்தார்' நோன்பு திறக்கும் நிகழ்வு நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுஉரையாற்றும்போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அக்கினிப் பரீட்சை

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அந்த நாட்டுக்கு வரிச் சலுகை (ஜிபிஎஸ் பிளஸ்) திட்டத்தின் மூலம் கிடைத்துவந்த அனுகூலம் இடைநிறுத்தப்பட்டுள்ளதான விடயம் நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினரால் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்வது இப்போது சிக்கலாகியுள்ளது. இது நிலமையைச் சுமூகமாக்கவேண்டிய எந்த முயற்சிகளையும் ஆளும்தரப்பு மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் எதிரணியால் முன்வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான முன்னுரிமைத் திட்ட (GSP+) வரிச் சலுகைகளை மதிப்பிடுவதற்காக ஐரோப்பிய ஒன்றிய (EU) பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தர உள்ளதாக வெளியுறவு அமைச்சர் கடந்த வாரம் அறிவித்திருதார். ஆனால், அமெரிக்காவிற்கான சிக்கல் குறித்து அவர் எதுவும் தெரிவித்திருக்கவில்லை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் இரண்டாவது பெரிய வர்த்தக பங்காளியாகும். டொலர் பற்றாக்குறை உள்ள இலங்கைக்கு, ஜிபிஎஸ் சலுகைத் திட்டம் ஒரு முக்கியமான பொருளாதார உயிர்நாடி என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் கருத்துப்படி, 2023ஆம் ஆண்டில், இலங்கை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கு (UK) 3.63 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்தது, இது அந்த ஆண்டுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 30% ஆகும். ஆறு இலக்க ஹார்மோனைஸ்டு சிஸ்டம் (HS) குறியீடுகளின் கீழ் இலங்கையால் தைக்கப்பட்ட ஆடை, ரப்பர், கடல் உணவுகள் மற்றும் தேநீர் போன்ற 1,301 பொருட்கள் மீது இலங்கை கவனம் செலுத்தி வருகின்றது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவை தைத்த ஆடை ஏற்றுமதிக்கான முக்கிய இடங்களாகும், இலங்கையின் மொத்த ஆடை ஏற்றுமதியில் பாதிக்கும் மேல் (54.9%) ஐரோப்பாவிற்கு மட்டுமே அனுப்பப்படுகின்றன. எனவே, ஜிஎஸ்பி பிளஸ் சலுகை இலங்கைக்கு மிக முக்கியமானது. இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய போராடிவரும் நிலையிலும் 2028இல் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்க வேண்டிய நிலையிலும் இந்தச் சலுகையை இழப்பது நினைத்தும் பார்க்க முடியாதது. எனவே முக்கியத்துவம் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் தெளிவாகத் தெரிய வேண்டும்.

இந்தச் சலுகை இழக்கப்படுவது ஒட்டுமொத்த இலங்கையர்களையும் மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளும் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்.

ஜிபிஎஸ் சலுகையைப் பெறுவதற்கு மனித உரிமைகளின் நிலமை மிக முக்கியமானது என்று ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியன கூறிவந்தபோதும் போர்க் காலங்களிலும்கூட இந்தச் சலுகையைத் தொடர்ந்து இலங்கையால் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. இப்போது அதை இழப்பதென்பது இலங்கைக்குத் தாங்க முடியாத பாரம் என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது.

2010 முதல் பதவியில் இருந்தவந்த ஆளும்தரப்புக்கள் ஜிபிஎஸ் சலுகையைத் தொடர்ந்து நிபந்தனையுடன் கூடிய வாக்குறுதிகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்கி வந்துள்ளன. ஆனால் அவற்றை நிறைவேற்றத் தவறியுள்ளன. இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளும் இந்த வாக்குறுதிகளுக்கு அடங்கியுள்ளன. இலங்கை அரசின் இத்தகைய தோல்விகள், சர்வதேச அரங்கில் அதன் நம்பகத்தன்மையை மிகப் பலவீனமடையச் செய்துள்ளன.

பெரிதும் விமர்சிக்கப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) நீக்குவது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளில் முக்கியமான ஒன்று. இந்த ஆளும்தரப்பு பதவிக்கு வந்து 6 மாதங்கள் கடந்துவிட்டபோதும் அது நிறைவேற்றப்படவில்லை. இதுவரை ஐரோப்பிய ஒன்றியத்தை ஏமாற்றப் பயன்படுத்தப்பட்டுவந்த நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான உள்நாட்டு வழிமுறைகளை வலுப்படுத்துவது உள்ளிட்ட விடயங்களும் முடங்கிப் போயிருக்கின்றன. ஜனநாயகத்திற்கு எந்தவிதக் குந்தகமும் இல்லாத பன்னாட்டு நாணய நிதியத்தின் பிணை எடுப்புத் திட்டத்தை அப்படியே பின்பற்றுவது என்பதைத் தவிர இலங்கையில் முன்னேற்றம் எதுவும் இல்லை.

இருப்பினும், இலங்கை அதன் மக்களின் அடிப்படைச் சுதந்திரம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA), நல்லிணக்க செயல்முறை, சிவில் சமூகத்திற்குவழங்கப்பட்ட இடம்ஆகியவற்றைஎவ்வாறுகையாள்கிறதுஎன்பதன் மீதான அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய கவலைகள் மாற்றம்பெறவில்லை. இதற்கிடையில், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல், ஒரே பாலின உறவுகளை குற்றமற்றதாக்குதல், தொழிற்சங்கம் அமைக்கும் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசுதல், போதைப்பொருள் கட்டுப்பாடு ஆகியவை மனித உரிமைகளை நிறைவேற்றுவதற்கான உறுதிமொழிகள் என்பனவும் அவற்றின் கவனத்தில் இருக்கின்றன.

ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான உள்நாட்டு பொறிமுறையை வலுப்படுத்துவதற்கும் ஆளும்தரப்புக் காட்டிய விருப்ப அறிகுறிகள் மட்டுமே இம்முறை ஜிபிஎஸ் சலுகையைப் பெறப் போதுமானதா என்பது கேள்விக்குரியதுதான். இடதுசாரிப் பின்னணியைக் கொண்ட, சீனாவுடன் நெருக்கமாகக்கூடிய சாத்தியங்களைக் கொண்டிருக்கின்ற ஆளும்தரப்பு மீது மேற்குநாடுகள் அழுத்தம் கொடுக்கக்கூடிய 'பிரமாஸ்திரமான' இந்த வரிச் சலுகையைப் பயன்படுத்தி அவை ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுக்க முன்வரும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே. ஆளும்தரப்புக்கு அக்கினிப் பரீட்சைகள் பல அடுத்தடுத்துக் காத்திருக்கின்றன



# பார்த்துப் பேசுவோம்!

**கணேசன்**

இரண்டாயிரம்ஆண்டுகளுக்குமுன்னதாகவே, 'யாதும் ஊரே... யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த கருத்தை உலகுக்கு அளித்தனர் நம் முன்னோர்கள். அப்படி இருக்கும்போது, இன்று அண்டை வீட்டில் இருப்பவரையே யார் என்று தெரியாமல் நாம் வாழ்ந்து வருகிறோம். வீட்டின் முன்பகுதியில் திண்ணையில் உட்கார்ந்து அக்கம்பக்கத்தாரும் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்தவர்கள் நம் முன்னோர்கள். தனித்தனியாக வீடுகள் இருக்கும்போதுகூட நாம் அனைவருடனும் பேசி வந்தோம். அடுக்கு மாடிகள் ஆனவுடன், அடுத்த வீட்டுக்காரர் யாரென்று நமக்குத் தெரியவில்லை. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை.

உறவுகள், நட்பு ஆகியவை விலைமதிப்பு இல்லாதவை. அவற்றின் அருமையை அவற்றை இழந்த பின்தான், நாம் உணரப் போகிறோம். தகவல் தொடர்பு வளர்ச்சியடைந்து மிக உயர்ந்த நிலையை எட்டிவிட்டது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அது இரு பக்கமும் கூரான கத்தி போன்றது. இன்றைய தலைமுறை அக்கறை காட்ட வேண்டிய விஷயம் தகவல் தொடர்பை ஒழுங்காக, சரியாகப் பேண வேண்டும் என்பதுதான்.

பேசுவது என்பது ஒரு கலை. பேசாதிருப்பது மற்றொரு கலை. எங்கே பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும், எங்கே பேசக் கூடாது, எப்படிப் பேசக் கூடாது என்பதில்தான் வாழ்க்கையின் வெற்றி இருக்கிறது என்பதே உண்மை.

இதை அறியாமல்தாங்கள்பேசும்முறைதான் சிறந்த தகவல் தொடர்பு என இன்றைய இளைய தலைமுறையினர் நினைத்துக் கொள்வது ஆபத்தானது. பெற்ற தாய், தந்தையிடம், கற்றுத்தரும் ஆசிரியரிடம், மனைவியிடம், கணவனிடம், அதிகாரிகளிடம் எப்படிப் பேசுவது என்பதே பலருக்குத் தெரிவதில்லை. அதனால்தான், சண்டைகள், வேறுபாடுகள், ஏன், தற்கொலைகள், கொலைகள், மண முறிவுகள் என எல்லாத் தரப்புப் பிரச்சினைகளுக்கும், பேசும்விதமே அடிப்படைக் காரணமாகிறது.

ஒருவர் பேசும் வார்த்தைகளே அவர் குறித்த பிறரின் மதிப்பீட்டை உருவாக்குகின்றன. வார்த்தைகளில் கவனம் வைத்துப் பேசினால், அவைஒருவரின்நடத்தையைஉருவாக்குகின்றன. அந்த நடத்தையே அவருடைய வாழ்வு ஆகிறது.

'மனதில் உறுதி வேண்டும்' என்று பாடிய பாரதி, 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்கிறான். வாக்கினில் உறுதி வேண்டும் என்று சொல்லவில்லை. 'மனதில் உறுதி... வார்த்தைகளில் இனிமை' இருந்தால், நினைவு நல்லதாகும்; நெருங்கிய பொருள் கைப்படும் என்கிறான்!

வள்ளுவர் சொல்கிறார்:
சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்!

ஒரே ஒரு வார்த்தையினால் வாழ்வை இழந்தவர்கள் இருக்கிறார்கள். வாழ்வை முடித்துக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். வாழ்வைச் சவாலாக எடுத்துக் கொண்டு வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஒரே ஒரு வார்த்தையினால் உயர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

நல்ல வார்த்தைகளைக் கூறி, பிறரின் மனத்தில் நம்பிக்கையை விதைத்து, நேர்மறை எண்ணங்களை உருவாக்கி, அவர்களைப் பாராட்டினால், அந்த மனிதன் வளர்வான். இதற்கு மாறாக, எப்போதும் எதிர்மறையாகப் பேசுதல், பிறரைக் கேலி செய்தல், குறைகாணுதல், எல்லோருடைய முன்னிலையிலும் மற்றவர்களை அவமானப்படுத்திப் பேசுதல் ஆகியவை கேட்பவரின் நம்பிக்கையைப் பாழாக்கி, அவர்களுடைய சிந்தனையைத் திசைதிருப்பி, நல்ல செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்குக் காரணமாகிவிடுகின்றன.

அப்படிப் பேசுபவர்கள் அரசியல், குடும்பம் மற்றும்நிறுவனங்களின்தலைவராகஇருந்தாலும், அவர்களின் மீதுள்ள மதிப்பும், மரியாதையும் குறையவே செய்கின்றன. பதவி, அதிகாரம் இந்த இரண்டினால் ஆடும் ஆட்டங்களும், ஆடம்பரங்களும், ஆடும் பம்பரங்கள் போன்றவைதான். சுற்றி முடிந்தபின் கீழே விழுந்தாகவேண்டும்!

நல்லவார்த்தைகளின்அதிர்வலைகள்எங்கும் பரவும். ஏன் பல அரசியல்வாதிகள், எவ்வளவோ ஊழல்கள் செய்தாலும், தீயவழியில் பயணம் செய்தாலும் வசதியுடன் நன்கு வாழ்கின்றனர் தெரியுமா? அவரைச் சுற்றியுள்ளவர்கள் அவரை எப்போதும் 'வாழ்க' , 'வாழ்க' என்று வாழ்த்துவதுதான். அந்த வாழ்த்துகளே அரசியல்வாதிகளை வாழ வைக்கின்றன. இதில் உண்மை இல்லாமல் இருக்கலாம். அரசியல்வாதிகள்உயர்ந்தவாழ்க்கைவாழ்வதற்கு வேறு பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நம்மிடம் நேர்மறையான கருத்துகளைப் பேசும்போது, நம் மனதில் நேர்மறை எண்ணங்கள் நிரம்பி வழிகின்றன. அது நம் வாழ்க்கையை உயர்வை நோக்கி முன்னேற்றுகிறது. இது அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, சாதாரண மக்களுக்கும் பொருந்தும்.

'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையதுஉயர்வு'என்றுதிருவள்ளுவர் சொல்வதேஉண்மை.ஆனால்அந்தஉள்ளத்தை வெளிக்காட்டும் வார்த்தைகள் சரியானதாகவும், பொருத்தமானதாகவும், உரிய காலத்தில், உரியவிதத்தில் வெளிப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

உண்மையைப் பேசவேண்டும். ஆனால் அது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க வேண்டும். 'நீ மடத்தில் இருக்கப் பிறக்கவில்லை. இந்த மானுடம் பயனுற, உலகம் செழிக்கப் பிறந்தவன்'என்றுகூறிவிவேகானந்தரைவாழ்த்தி அனுப்பிய பரமஹம்சரின் வார்த்தைகள்தான் உலகம் முழுக்கத் தெரிந்த விவேகானந்தரை உருவாக்கியது.

இப்படி நேர்மறை வார்த்தைகளும் பாராட்டுகளுமே நம் எல்லாருடைய வாழ்வையும் வளமாக்கி, கனவை நனவாக்கி, மனித வாழ்க்கையை மகிழ்ச்சி நிறைந்ததாக்கும்.

# 14 இளைஞர்களுடன் களமிறங்கும் தமிழ் தேசியமுன்னணி வவுனியா வடக்கில் தமிழ் தேசிய தூய ஆட்சி அமைக்குமாம்

## அமைப்பாளர் தவபாலன் நம்பிக்கை

14 இளைஞர்களுடன் களமிறங்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னனி வவுனியா வடக்கில் தமிழ் தேசியம் சார்ந்து தூய அரசியலுடன் ஆட்சி அமைக்கும் என கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் வேட்பு மனுவை தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடைபெறவுள்ள உள்ளூஜ¬ட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்ணணி வவுனியா மாவட்டத்தின் மாநகர சபை உட்பட 4 சபைகளில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகிறது.

வவுனியா வடக்கு உள்ளூராட்சி சபைக்கான வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளோம். நான்கு சபைகளிலும் கடுமையான நெருக்கடியின் பால் இந்த



தேர்தலை எதிர்கொண்டாலும், நிச்சயமாக தமிழ் தேசிய பரப்பில் உரிமைக்காக நேர்மையாக அரசியல் செய்கின்ற ஒரு தரப்பு என்ற அடிப்படையில் கணிசமான வெற்றிகளைப் பெறுவோம்.

வவுனியா வடக்கைப் பொறுத்தவரை நிலப்பரப்பு திட்டமிட்ட ரீதியில் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றது. இம்முறை சிறந்த வேட்பாளர்களை அதிலும் இளைஞர்களை அதிமாக உள்வாங்கி நிறுத்தியுள்ளோம். 14 இளைஞர்களை களமிறக்கியுள்ளோம். அவர்களுடன் கடந்த முறை உள்ளூராட்சி மன்றத்தில் இருந்தவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள், உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்க கூடியவர்களை களம் இறக்கியுள்ளோம்.

வவுனியா வடக்கைப் பொறுத்தவரை மத வழிபாடு தடுக்கப்படல், நில ஆக்கிரமிப்பு இடம்பெறும் பகுதியாக இருக்கிறது. தூய்மையாக அரசியல் பேசும் ஒரு தரப்பு என்ற அடைப்படையில் இம்முறை நாம் ஆட்சி அமைப்போம்.

தூய்மையான, நேர்மையான தமிழ் தேசியம் நிறைந்த பிரதேச சபை ஒன்று உருவாக வேண்டும் என்ற அவா உள்ளது. அதனை மக்கள் நிறைவேற்றுவார்கள். அதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களால் ஆற்றக் கூடிய பணிகளை தமிழ் தேசிய நோக்கோடு செயற்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

100

# தம்பலகாமத்தில் பிரதான மகளிர் தின நிகழ்வுகள்

(ஹஸ்பர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வு செவ்வாய்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த மகளிர் தின நிகழ்வில் உள்ளூர் பெண் தொழில் முயற்சியாண்மையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இம் முறை குறித்த நிகழ்வுக்கான தேசிய தொனிப் பொருளாக ’ நிலையான எதிர்காலத்திற்கு அவள் ஒரு வலுவான வழிகாட்டியாக இருப்பாள்’ எனும்தொனிப் பொருள் விளங்குகிறது.



சர்வதேச மகளிர் தினமானது மார்ச் 08 இனை முன்னிட்டு இந்த பிரதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்தநிகழ்வில்தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் இயங்கி வரும் மகளிர் சங்க உறுப்பினர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன. குறித்த நிகழ்வுக்கு பெண்களுக்கான சுதந்திர அமைப்பான ஈவிண்ங்ஸ் மற்றும் சமுர்த்தி பிரிவு அனுசரணை வழங்கியிருந்தது.



குறித்த நிகழ்வுகளை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி , பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் நஸ்ரின் டிலானி ஆகியோர்கள் இணைந்து நெறிப்படுத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் பி.யு.பி.எல்.உடகெதர, சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , இலங்கை வங்கி முகாமையாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் வடக்கில் 4 சிகிச்சை நிலையங்கள்

## செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள 4 சிகிச்சை நிலையங்களின் செயற்பாடுகளையும் வினைத்திறனுடன் இயங்கவைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை, கிளிநொச்சிமாவட்ட மருத்துவமனை, மாங்குளம் ஆதார மருத்துவமனை, வவுனியா மாவட்ட மருத்துவமனை ஆகியனவற்றில் விசேட சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை கடந்த காலங்களில் திறந்துவைக்கப்பட்டாலும் அவற்றின் தேவைப்பாடுகள் முழுமைப்படுத்தப்படாமையால் வினைத்திறனுடன் செயற்படமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

ஆளணிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சவாலாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அவற்றை எவ்வாறு தீர்த்து இவற்றை இயங்க வைக்கலாம் என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

அதேபோன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

3 தசாப்தங்களாக வடக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறையில் ஆளணி மறுசீரமைப்பு நடைபெறவில்லை என்றும், இதனைக் கருத்தில்கொண்டு ஆளணி மறுசீரமைப்பு, வெற்றிடமாகவுள்ள ஆளணிகளை நிரப்புவதற்கு மத்திய சுகாதார அமைச்சைக் கோருவதற்கும் இந்தக் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சிமாவட்ட மருத்துவமனையிலுள்ள பெண்கள் சுகாதாரப் பராமரிப்புக்கான சிறப்பு சிகிச்சை நிலையத்தை இயங்கச் செய்வதற்கான நிதிக்கான வாய்ப்புகளை எவ்வாறு உருவாக்கிக்கொள்வது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், வவுனியா மற்றும் மாங்குளம் மருத்துவமனைகளில் பொறுப்பு மருத்துவ அத்தியட்சகர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி, முன்னாள் மருத்துவபீடாதிபதி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். 113





# மருதனார்மடத்தில் கோர விபத்து; முதியவர் சாவு

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார் மடத்தடியில் இடம்பெற்ற விபத்தில் 75 வயதான முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு மருதனார் மடத்தடியிலிருந்து உரும்பிராய் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் சைக்கிளில் வந்த முதியவர் ஒருவர் மோதியுள்ளார்.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளில் வந்தவர் மற்றும் சைக்கிளில் வந்த முதியவர் இருவரும் காயமடைந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இருப்பினும் சைக்கிளில் பயணித்த முதியவர் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயம் உடைத்து ஏறாவூரில் திருட்டு

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் நான்காம் குறிச்சி எல்லை நகர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேக பணிகளுக்காக ஆலய எழுந்தருளி விக்கிரகம், தொன்மை வாய்ந்த விக்கிரகங்கள், பூஜை பொருள்கள் போன்றன தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில், வெள்ளிக்கிழமை அதிகாலை 01.30 மணியளவில் ஆலயத்தின் மூல ஸ்தானம் உடைக்கப்பட்டு சிலைகள் களவாடப்பட்டுள்ளதுடன் உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் அங்கிருந்த சீசீரீவி கெமராவில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினரால் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.








# வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருக்கைகள் சிதைந்த நிலையில்

## பயணிகள் அவதி



வவுனியா புதிய பஸ் நிலையத்தில் காணப்படும் இருக்கைகள், அமர முடியாதவாறு உடைந்து காணப்படுவதுடன் அவை எவ்வித பராமரிப்பின்றி காணப்படுவதாக பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதுமட்டுமின்றி இருக்கைகள் உடைந்து மற்றும் பழுதடைந்து காணப்படுவதால் பயணிகள் எழுந்து நிற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் எழுந்து நிற்க முடியாதவர்கள் குறித்த இருக்கையில் அமரும் போது உடலில் காயங்கள் ஏற்படுவதாகவும், இருக்கைகளில் இருந்து விழ வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகவும், பல மாவட்டங்களில் இருந்து வந்து செல்வோர் அதிகமாக கூடும் இடமாகவும் உள்ள வவுனியா பிரதான பஸ் நிலையத்தின் நிலை இவ்வாறு காணப்படுவதால் பயணிகள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது. (100)

# 11,081 குடும்பங்களுக்கு காணிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இல்லை

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்குக் காணிகள் இல்லை என்றும், காணிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கடந்த 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 823 குடும்பங்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 796 குடும்பங்களும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 828 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 342 குடும்பங்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 568 குடும்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 730 குடும்பங்களும், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் 456 குடும்பங்களும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 855 குடும்பங்களும், உடுவில் பிரதே செயலர் பிரிவில் ஆயிரத்து 176 குடும்பங்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 526 குடும்பங்களும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 256 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 589 குடும்பங்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 109 குடும்பங்களும் என யாழ். மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்கு காணிகளை வழங்குமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இவற்றில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 38 குடும்பங்களுக்கும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 22 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 85 குடும்பங்களுக்கும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களுக்கும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 72 குடும்பங்களுக்கும் என மொத்தமாக 352 குடும்பங்களுக்கு இவ்வாறு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 729 குடும்பங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

# யானைகளிடம் மாட்டிக்கொண்டவரை மீட்ட வன ஜீவராசிகள் திணைக்களம்

(பாறுக் ஷிஹான்)

காட்டு யானைகளின் ஆக்கிரமிப்பால் வயல் வெளியில் காவல் நின்றவர் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் அங்கு வந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்ட சம்பவம் அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

சுமார் 50 இற்கும் அதிகமான யானைகள் வயல் அறுவடையின் பின்னர் மேற்குறிப்பிட்ட மாவடிப்பள்ளி பகுதியில் உட்புகுந்து அங்கு புதிதாக முளைத்துள்ள புற்களை உண்டு வருவதுடன் சட்டவிரோதமான குப்பைக்கூளங்களும் நாடி வயல் வெளிகளில் நடமாடிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் சம்பவதினம் மாலை அறுவடை செய்யப்பட்ட வயல்வெளியில் மாடுகளை மேய்ப்பதற்காக காவலுக்கு சென்ற நபரை திடிரென அங்கு சென்ற யானைகள் சுற்றி வளைத்ததுடன் குறித்த நபரைத் தாக்க முயன்றுள்ளன.

உடனடியாகசெயற்பட்ட அந்நபர் அருகில்உள்ள உயரமான இடமொன்றில் ஏறியுள்ளார்.எனினும் குறித்த நபரை விடாது துரத்திய யானைகள் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

இதே வேளை தகவலை அறிந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு உடனடியாக வந்து வெடி பொருள்களை பாவித்து யானைக் கூட்டத்தை பின்வாங்க செய்ததுடன் யானைத் தாக்குதல் ஆபத்தில் இருந்த நபரையும் மீட்டுள்ளனர்.

தற்போது இப்பகுதியில் சுமார் 200 இற்கும் அதிகமான யானைகள் பட்டி பட்டியாக வருகை தருவதுடன் பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன.அண்மைக்காலமாக இப்பிரதேசத்தில் கூட்டமாக ஊடுருவும் யானைகள்



காய்க்கும் தென்னை மரங்கள் உட்பட பயன் தரும் மரங்கள் வீட்டுத் தோட்டங்கள், குடியிருப்புகள், வேலிகள் என்பவற்றை துவம்சம் செய்து வருகின்றன.

பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்தழிவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், நூற்றுக்கணக்கான காய்க்கும் தென்னை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தில் யானை, மனித மோதலை கட்டுப்படுத்தி சொத்தழிவு, உயிரிழப்புக்களை தவிர்க்கும் நோக்கில் இதற்கான நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுத் தருமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

இதே வேளை அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் கீழ் உள்ள குடாக்கள்ளி மேற்கு கண்டத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த சுமார் 15 ஏக்கர் வேளாண்மைகளை காட்டு யானைகள் நாசமாகியுள்ளன.



## கொள்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்த பொழுதும் ஆசனங்களுக்கோ எண்ணிக்கைகளுக்கோ அடிபட்டு செயற்பட்டதாக இல்லை. மாறாக எந்தளவுக்கு இந்த வேட்பாளர் பட்டியலில் மக்கள் மட்டத்திலே நம்பிக்கையை ஏற்படுத்தலாமோ அந்த அடிப்படையிலே தயாரித்துள்ளோம். கொள்கையின் அடிப்படையில் உறுதியாக, நேர்மையாக அரசியலில் பயணிக்கக் கூடியவர்களாகவும், கடந்த காலங்களில் செயற்பாடுகள் மூலம் மிக உறுதியான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியிருக்கிறவர்களாகவும் சேர்த்துக் கொள்கின்ற நோக்கத்தோடு பெரும்பான்மையான விட்டுக் கொடுப்போடு இந்தப் பட்டியலைத் தயாரித்திருக்கின்றோம்.

இந்தப் பட்டியல் விவரங்கள் வெளிவரும் போது அனைவரும் இதனை ஏற்றுக்கொள்வார்கள்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பிற்பாடு தமிழ் தேசியக் கொள்கையினை காப்பாற்றுவதற்கான முயற்சியை நாம் மேற்கொண்டும் பல்வேறு ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களுக்காக தமிழ் அரசுக் கட்சி அந்த முயற்சியில் இருந்து விலகியது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் எங்களை விட்டு தமிழ் தேசியத்துக்குள் ஏற்கமுடியாத தரப்புகளுடன் இணைந்து பயணிக்க ஆரம்பித்தது.

இந்தத் தரப்புகள் முழுக்க முழுக்க தேர்தல் அரசியலோடு மட்டுமே சிந்திக்கின்றமையைப் பார்க்கமுடிகிறது. எதிர்காலத்திலாவது அவர்கள் திருந்தி கொள்கையின் அடிப்படையில் நேர்மையானபாதையில்பயணிக்கவேண்டும். அதற்கு நிர்ப்பந்திக்கும் வகையில், சைக்கிள் சின்னத்தில் போட்டி போடுகின்ற அதேநேரம் மற்ற விடயங்களில் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய தயாராக இருக்கக்கூடிய, ஆசனம் பதவிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கொள்கையில் உறுதியாக பயணிக்க கூடிய எம்மைப் பலப்படுத்துவது காலத்தின் கட்டாயம் - என்றார்.

## வறுமைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தீர்மானத்திற்கு அமைவாக 2025ஜனவரியில் உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டின் பிரகாரம், ஒரு நபர் ஒரு மாதம் வாழ்வதற்கு 16,334 ரூபா தேவை. 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு மாதம் 65,336 ரூபா தேவைப்படுகிறது . இந்நிலையில் இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கெட் 50 ரூபாவால் அதிகரித்து வரும் வேளையில், 4 பேர் கொண்ட குடும்பத்தின் உணவுக்குத் தேவைகளுக்கு 65,336 ரூபா போதுமா ?

வறுமைக் கோட்டை மதிப்பிடும் முறைமையில் பல பிழைகள் காணப்படுகின்றன. இது குறித்து ஆராய்ந்து, தரவு மையக் கொள்கைகளை வகுக்க வேண்டும். தவறான தரவுகளின் அடிப்படையில் அரச கொள்கைகள் வகுக்கப்பட்டால், சகலதுமே சீர்குலையும். முன்னைய ஆளும்தரப்பும் விஞ்ஞான பூர்வ தரவுகளின் அடிப்படையில் 'அஸ்வெசும' திட்டத்தை முன்னெடுக்காமையினால் தோல்வி கண்டதொரு திட்டமாக அது இன்று மாறியுள்ளது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்களிப்பை வழங்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் தற்போது பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். பெரும் நெருக்கடிகள் உருவாகி ஏற்படுத்திய மோசமான கடன்கள், அதன் நிலுவைத் தொகைகள் மற்றும் வட்டித் தொகைகள் போன்றன காணப்படும் சூழ்நிலையில், அவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். இந்தக் கடன் சுமைக்கு நிலையான தீர்வொன்றை வழங்கவேண்டும்.

சர்வதேச வர்த்தக உறவுகளை நாம் பேணிக்கொள்ளவேண்டும். தற்போது நமது நாட்டில் இருதரப்பு மற்றும் பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான ஆளும்தரப்பின் கொள்கை நிலைப்பாட்டை அறிய விரும்புகிறோம்.

நாட்டிற்குப் வருமானம் சேர்க்கும் வகையில் இந்த ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இது தொடர்பிலான தொழில்நுட்ப ரீதியிலான நடவடிக்கைகள் ஏதும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவா? வலுவான வர்த்தகக் கொள்கையை உருவாக்குவதற்கான பொறிமுறை இங்கு காணப்படுகின்றதா என்பதில் சிக்கல் காணப்படுகின்றது. .

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை குறித்து மீண்டும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. நாட்டை நேசிக்கும் எதிர்க்கட்சி என்ற வகையில், ஜி.எஸ்.பி. பிளஸுக்காக எப்போதும் குரல் எழுப்பி வருகிறது. இதனைப் பெற நாம் எமது முழு ஆதரவைப் பெற்றுத் தருவோம். இது நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை நல்கி வருவதால், இதனைப் பேணி வருவதற்கு ஏற்ற முறையான கொள்கையை ஆளும்தரப்புக் கொண்டிருக்கவேண்டும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் மூலம் 3,451 பொருட்களுக்கான அமெரிக்க சந்தை வாய்ப்பு எமக்கு காணப்பட்டாலும், அது 2020 டிசம்பர் 20 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கான இராஜதந்திர முன்னெடுப்பு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. தமக்கு நல்ல இராஜதந்திர உறவுகள் இருப்பதாக ஆளும்தரப்பு தேர்தல் காலங்களிலும் அதற்கு பின்னரும் தம்பட்டம் அடித்தது. அவ்வாறு இராஜதந்திர உறவுகள் இருக்குமானால் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியுமல்லவா?

நுகர்வோர் மற்றும் வணிகத் துறை குறித்து நாம் புதிதாகச் சிந்திக்கவேண்டும். உணவுப் பாதுகாப்புக் குறித்த கொள்கைகளை உருவாக்கும்போது, நாம் சரியான வழியில் அதனைச் செய்யவேண்டும். சரியான வழியில் செல்லவேண்டும். இல்லையெனில், தவறான தரவுகளின் அடிப்படையில் அரச கொள்கைகள் வகுக்கப்படும். புள்ளி விபரங்கள் எவ்வாறு காணப்பட்டாலும், நாட்டு மக்கள் இன்று வாழ முடியாத நிலையை அடைந்துள்ளனர்.

வாடிக்கையாளரைப் பாதுகாப்பதில், உயர்தரத்துடன் வாடிக்கையாளரைப் பாதுகாக்கும் புதிய செயல்முறைக்குச் சென்று, சட்டத்தை வலுவாக்கி, நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஒரு பயனுள்ள முறைபாடுகளைத் தீர்க்கும் பொறிமுறையை தாபித்து, உற்பத்தி தொடர்பான பாதுகாப்பை வழங்கி, சிறந்த விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகளை உருவாக்கி, தரவு தொடர்பான பாதுகாப்பை ஏற்படுத்தி, அதனை கண்காணித்து வரும் பொறிமுறையை தாபித்து, இதனை வினைதிறனாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலம் நுகர்வோர் பாதுகாக்கப்படுவார்கள் என்றார்.

## பட்டலந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திஸநாயக்க அரசுத் தலைவராகத் தெரிவாகி எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் 6 மாதங்கள் ஆகின்றன. தேர்தல் மேடைகளிலும் அதற்கு முன்னரும் உணவு, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றுக்கான வரிகளை முதலாவது வரவு செலவுத் திட்டத்திலேயே இல்லாமல் செய்வோம் என்று கூறியிருந்தார். ஆனால் அதனை இன்னும் செய்யவில்லை. யூடியுப், டிக்டொக் பார்த்த பெண்களில் பலரும், 76 வருடங்களாக ஊழல் மோசடிகளாலேயே வரிகள் அதிகரித்துள்ளன என்றும் அந்த ஊழல்கள் குறைந்தால் வரி குறையும் என்றும் வரி குறைந்தால் பொருட்களின் விலை குறையும் என்றும் நம்பிக்கொண்டு தமது கணவர் கூறுவதையும் கண்டுகொள்ளாது அநுரகுமாரவுக்கே வாக்களித்தனர்.

6 மாதங்கள் ஆகியும் இன்னும் பொருட்களின் விலைகளும் குறையவில்லை. வருமானமும் அதிகரிக்கவில்லை. இப்போது அந்தப் பெண்களால் தமது கணவர்களுக்கு முகம் கொடுக்க முடியுமோ தெரியவில்லை. இதனால் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

அத்துடன் நீங்கள் பட்டலந்த தொடர்பில் தேடும் போது நாடு பூராகவும் பிரேம கீர்த்தி, ஸ்டேன்லி விஜேசுந்தர, விஜேகுமாரதுங்க, கொட்டிகாவத்த சத்தாதிஸ்ஸ தேரர் கொல்லப்பட்டமை, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், இராணுவத்தினர், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் கொல்லப்பட்டமை தொடர்பிலும் தேடவேண்டும். பட்டலந்த வதைக்காரருக்கு தண்டனை கொடுக்கும் நடவடிக்கையுடன் இவை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எவ்வாறாயினும் பட்டலந்த சித்திரவதை புரிந்தவருக்கு தண்டனை வழங்கப்படுமா என்பது சந்தேகமே. ஏனெனில் சிறந்த டீல் ஒன்று உள்ளது. 1998இல் ஆணைக்குழு அறிக்கை வந்தது. அப்போது, 1994 முதல் சந்திரிகாவுடன் இணைந்து ஆளும்தரப்பை ஜே.வி.பியினரே அமைத்திருந்தனர். அத்துடன் மஹிந்த ராஜபக்சவுடன் 2005இல் உடன்படிக்கை செய்தனர். அப்போதும் அதற்கான கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. 2010 அரசுத் தலைவர்த் தேர்தலில் பொன்சேகாவுக்கு ஆதரவளித்தபோதும், 2015இல் நல்லாட்சி ஆளும்தரப்பு திருட்டுத்தனமாகவேனும் அது பற்றிக் கூறவில்லை. 25 வருடங்களாக இருட்டு அறையில் இருந்தது அறிக்கை.

அல்ஜசீராவில் தகவல் வெளியான பின்னரே இப்போது அறிக்கையை சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இனியாவது 1988/89இல் நடந்த சகல கொலைகள் தொடர்பிலும் மீள முழுமையான விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## ஒரே ஒரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் தகவலின் அடிப்படையில் ஒரே ஒரு நாளுக்குத் தேவையான அரசியை உற்பத்தி செய்வதற்குப் போதுமான நெல் கூட ஆளும்தரப்பால் கொள்வனவு செய்யப்படவில்லை.

ஆளும்தரப்பு நெல் கொள்வனவுக்காக 5 பில்லியன் மாத்திரமே ஒதுக்கீடு செய்துள்ளது. அந்த நிதியில் நான்கு நாட்களுக்கு போதுமான நெல்லை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும். கீரி சம்பா அரிசி தற்போது கட்டுப்பாட்டு விலையைவிட 40 ரூபாய் அதிகமாகவே விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் ஆளும்தரப்பு கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றது" என்றார்.

## உள்ளூராட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுக்களை தாக்கல் செய்த பிறகு, பேரணிகள் அல்லது வாகனப் பேரணிகளை நடத்துவது தேர்தல் சட்டத்தின் கீழ் முரணானது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கை நிறைவடைந்த நாளிலிருந்து 35 அல்லது 49 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டலந்த வதைமுகாம் தொடர்பான செய்திகள் தற்போது மிகப் பரவலாக வெளிவருகின்றன. பட்டலந்த என்பது 1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் இருந்த ஜே.வி.பி. போராளிகளை கைது செய்துகொண்டு சென்று சித்திரவதை செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டது தொடர்பான அறிக்கை. அந்த அறிக்கை இவ்வளவு காலமும் கிடப்பில் இருந்து, இப்போது அல்ஜசீராவுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலுக்கு பின்னர் வெளி வந்துள்ளது.

88 மற்றும் 89இல் நடந்த ஜே.வி.பி. மீதான படுகொலைகள் தொடர்பாக முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஐ.நாவில் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்திருந்தார்.. ஜே.வி.பி. மீதான படுகொலைகள் தொடர்பான செய்தியை அவர் அங்கு கொண்டு சென்றிருந்தார். ஆனால் அந்தக் காலத்தில் இதற்கான தீர்வுகள் எட்டப்படவில்லை. ஜே.வி.பி. அடுத்து வந்த ஆண்டுகளில் சந்திரிகாவுடன் இணைந்து ஆட்சி செய்தபோதும் பட்டலந்த படுகொலைகள் தொடர்பில் எவ்வித கோரிக்கைகளையும் விடுக்கவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. இருந்தாலும் அந்த விடயத்தை இப்போது கையில் எடுத்திருப்பது நியாயமானது. இது தொடர்பில் விசாரணை வேண்டும். படுகொலை செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நீதி வேண்டும்.

கதிர்காமத்து அழகி மனம்பேரியை சொந்த சகோதர இராணுவத்தினரே நிர்வாணமாக்கி படுகொலை செய்தார்கள் என்பது உலக வரலாற்றில் மிக கேவலமான பதிவாக உள்ளது. அவ்வாறான இந்த நாட்டில் அதற்கு நீதி வேண்டும் என்று நான் பல தடவைகள் கூறியுள்ளேன். அதேபோன்று தமிழ்த் தேசிய இனம் சார்ந்த இசைப்பிரியா, கிருஷாந்தி போன்றோர் பாலியல் வன்புணர்வுக்கு பின்னர் அவர்கள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களுக்கான நீதி விசாரணைகளையும் நாங்கள் பல இடங்களில் கோருகின்றோம். தமிழர்களுக்கு நடந்தது மிகப்பெரிய இனப்படுகொலை. ஆனால் சிங்கள மக்களுக்கு அவர்களின் எழுச்சி, கிளர்ச்சிகளுக்கு எதிராக இந்த ஒரு வதைமுகாம்தான் உருவாக்கப்பட்டது.

1956 - 1958 காலப்பகுதியில் இலங்கையில் தமிழினம் மீது நடந்த மிகப்பெரிய இனப்படுகொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 1970 மற்றும் 1976 காலப்பகுதியிலும் மிகப்பெரிய இனப் படுகொலைகளும் பதிவாகியுள்ளன. அத்துடன் 1983இல் நடந்த ஜூலை படுகொலை மிகப்பெரிய இனப்படுகொலையாக உலக அரங்கில் பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் 2006இல் வாகரையில் நடந்த இனப்படுகொலை, 2009இல் முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி இனப்படுகொலை என்பன இந்த நாட்டில் மிகவும் முக்கியமானவையே. இதற்கான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

நாங்கள் பாதிக்கப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட ஒரு இனம். உணவுகூட அனுப்பாமல் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 4 இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இறுதிப் போர் நடைபெறும்போது, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு பகுதியில் இருந்தனர். ஆனால் 70 ஆயிரம் பேரே இருக்கின்றனர் என்று அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்சவும், அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவும் கூறி, 70ஆயிரம் பேருக்கான உணவுப் பொருட்களையே அனுப்பினர். இதில் எத்தனை பேர் பட்டினியால் கொல்லப்பட்டிருப்பார்கள். இது தமிழ்த் தேசிய இனம் மீதான மிகப்பெரிய இனப்படுகொலையாக இந்த உலகத்தால் பார்க்கப்படுகின்றது.

கனடா நாடு இந்த விடயத்தில் தனது கரிசனையைக் கொண்டுள்ளது. அங்குள்ள இரண்டு கட்சிகள் இங்கு நடந்தவை இனப்படுகொலை என்று ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளன. சர்வதேச அடிப்படையில் இந்த விடயம் பேசப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கை விடயங்கள் பேசப்படுகின்றன. ஆனால் இங்கு நடைபெற்றது இனப்படுகொலை இல்லை என வாதிடுகின்றீர்கள். அதுபற்றிப் பேசுவதில்லை. ஆனால் பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்கு தயாராகின்றீர்கள். நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாகக் கொல்லப்பட்டார்களோ, யார் நீதியின் கண்களுக்கு முன்னால் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதனை நாங்கள் தமிழர்களாக வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம்.

தமிழர்களுக்கு நடந்த இனப்படுகொலை தொடர்பில், தமிழ்த் தேசிய இனத்தின் மீதான படுகொலை தொடர்பில் ஏன் இந்த அரசால் சரியான முடிவை எடுக்க முடியவில்லை. 2015 செப்டம்பர் மாதம் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மனித உரிமைகள் பேரவையில் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றோம், பன்னாட்டு நீதியாளர்களின் ஆலோசனைகளைப் பெறுகின்றோம், தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்கின்றோம், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு நீதி காண்பதற்கு கலப்பு பொறிமுறையை கையாளுகின்றோம் என்று ஏற்றுக்கொண்டார். ஒரு ஆளும்தரப்பு இருக்கும்போது ஏற்றுக்கொண்டதை கோட்டாபய ஆட்சிக்கு வந்ததும் நிராகரித்தார். இந்த ஆளும்தரப்பும் இப்போது கோட்டாபயவின் நிலைப்பாட்டையே எடுத்து இதனை நிராகரித்துள்ளது.

நாங்கள் இந்த மண்ணில் உங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு விரும்புகின்றோம். இதனை நாங்கள் பல தடவைகள் பதிவு செய்துள்ளோம். ஆனால் நீங்கள் நீங்களாகவும், நாங்கள் நாங்களாகவும் எங்களுடைய தனித்துவங்கள், அடையாளங்கள் நிராகரிக்கப்படாமல் வாழ்வதற்கான உரிமைகள் இந்த மண்ணில் இருக்கவேண்டும். அது சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வாகத்தான் அமைய முடியும். ஒற்றையாட்சி இலங்கைக்குள் இந்தத் தீர்வு ஓர் இனத்தை இன்னுமொரு இனம் சுரண்ட முடியாமல், கபளிகரம் செய்ய முடியாமல் மற்றும் அடக்காமல் இருப்பதற்கான வழிமுறை ஒற்றையாட்சிக்குள் உருவாக முடியாது. ஆனால் ஒரு நாடாக இருப்பதற்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பது, அந்த நாட்டில் வாழும் பலதேசிய இனங்களை அரவணைத்துச் செல்வதற்கான

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகப்பெரிய பாதையாக மாறும்.

பட்டலந்த வதை முகாம் எல்லோருடைய குருதியைம் உறைய வைத்துள்ளது. அங்கு நடந்தது குற்றமென்றால் அது நிரூபிக்கப்படவும், உரியவர்கள் கைது செய்யப்படவும் தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் அதேபோன்று நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏன் விசாரணை செய்யத் தயங்குகின்றீர்கள்? அத்துடன் நாகர்கோவிலில் நடந்த படுகொலைகள், மண்டைதீவில் கொல்லப்பட்ட மக்கள் தொடர்பில் ஏன் நீங்கள் சிந்திக்க தவறுகின்றீர்கள்? குமுதினிப் படகில் கொல்லப்பட்ட மக்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது? குருநகர் கடலில் கொல்லப்பட்டவர்கள், கொக்கட்டிச்சோலையில் கொல்லப்பட்டவர்களுக்கு , வாகரையில் கொல்லப்பட்டவர்களுக்கு, திருகோணமலையில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது, நெடுங்கேணி ஒலுமடுவில், அம்பாறை மாவட்டத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்தது?

கொத்துக்கொத்தாக பல இடங்களில் கொல்லப்பட்டு அழிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் நிலங்களை இழந்துள்ளது. இன்னும் தமது சொந்த இடங்களுக்குப் போக முடியாமல் மக்கள் இருக்கின்றனர். பௌத்த தேவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. அந்தப் பிரதேசங்களின் காணிகளை பௌத்த இடங்களுக்குரிய காணி என்று கூறுகின்றனர். இன்னும் காணிகள் எடுக்கப்படுகின்றன. நாட்டின் நீதி என்ன? நீதி எவ்வாறு கிடைக்கும்? யாழ். செம்மணி சுடலையில் மனித எலும்புகூடுகள் எடுக்கப்பட்டன. அதற்கான நீதி இன்னும் வெளிவரவில்லை. அண்மையில் முல்லைத்தீவு குமுளமுனை பகுதியில் வீதி அகலப்படுத்தும் பணியின்போது இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களின் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவை இறுதிப் போரின்போது கைது செய்யப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டவர்களுக்கானதாக இருக்கலாம் என்று தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். பெண் போராளிகளின் உள்ளாடைகளுடனும், இலக்கத்தகளுடனும் அவை அந்த புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் தாக்கப்பட்ட விதத்தைக்கூட தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்கள் வாயை திறந்த நிலையில் புதைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் கூறுகின்றனர். எவ்வளவு சித்திரவதையின் பின்பு அவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம்?

பட்டலந்தை மட்டுமல்ல இந்த நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கில் பலபகுதிகளில் வதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்கு தமிழரின் மனித எலும்புகூடுகளை எங்கும் காணலாம். நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனி தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்கவேண்டும். சர்வதேச விசாரணைக்கு உட்பட்டதாகவும், மனித நேயத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாக இருக்கவேண்டும். மனிதர்களைக்கொல்வதில் மிகப்பெரிய குற்றம் உணவு அனுப்பாமல் கொல்லுதல். அதையும் செய்தார்கள். தமிழர்கள் மீது பராச் குண்டுகளையும் கொத்துக் குண்டுகளையும், பொஸ்பரசு குண்டுகளையும் வீசிக்கொன்றார்கள், சர்வதேச ரீதியாகத் தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள். இவையெல்லாம் போர்க் குற்றங்கள். வாகரையிலும், முள்ளிவாய்க்காலிலும் மிகப்பெரிய அளவில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் குண்டுகளின் அடையாளங்களுடன் மக்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

படைகளிடம் பலர் உயிருடன் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. குறைவாக உணவு அனுப்பிய காரணத்தால் எத்தனையோ ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். எத்தனையோ ஆயிரம் குழந்தைகள் தமிழர் புனர்வாழ்வு கழகம் வழங்கிய கஞ்சிக்காக சின்ன சின்ன கிண்ணங்களுடன் வரிசையில் நின்றபோது பராச் குண்டுகளில் சிக்கி கொல்லப்பட்ட வரலாறு அந்த மண்ணில் இடம்பெற்றுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட இனத்தின் சார்பாக அதனை நேரில் கண்டவன் என்ற வகையில் கூறுகின்றேன், தயவு செய்து நீதி விசாரணையை எல்லாவற்றுக்கும் கொண்டுவாருங்கள். அந்த மக்கள் நம்பக்கூடிய வகையில் அதனை செய்யுங்கள். அதுவே நல்ல செய்தியாக அமையும்.

பட்டலந்தவில் உங்களுடைய போராளிகளுக்கு நடந்தவற்றை மட்டும் விசாரணைக்கு உட்படுத்துவது ஒரு பக்கச்சார்பானதாக மாறும். உங்களை நாங்கள் ஜே.வி.பி போராளிகளாகவே பார்த்தோம். உங்களை பயங்கரவாதிகளாகப் பார்க்கவில்லை. ஜே.வி.பி. போராளிகள், கிளர்ச்சியாளர்கள் என்று கூறினாலும் உங்களுக்காக இரக்கத்துடன் பேசியவர்கள் நாங்கள். களனி ஆற்றில் இளைஞர்கள் கழுத்து வெட்டப்பட்டு மிதந்து வந்தபோது அவற்றை பார்த்து கவலையடைந்தவர்களில் தமிழர்கள் முக்கியமானவர்கள். எவர் கொல்லப்பட்டாலும் அதற்கான விசாரணை வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

பட்டலந்தவில் இருந்த வதை முகாம் ஒரே இனத்துக்குள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள். ஆனால் எங்கள் மீது திட்டமிட்டு 80 வருடங்களாக மெல்ல மெல்ல எமது நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல இலட்சம் மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர். உணவு அனுப்பாமல் தடை செய்யப்பபட்ட ஆயுதங்களை பயன்படுத்தி இனப்படுகொலை செய்தனர். இதனால் தமிழ்த் தேசிய மக்கள் மீதான இனப்படுகொலை மிகவும் கருத்தில் கொள்ள வேண்டியது. இதற்கான நீதி விசாரணை வேண்டும். பட்டலந்த என்ற சொல்லில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான இனப்படுகொலையை மறைத்துவிடவேண்டாம். அது சர்வதேச அளவில் பேசப்படும் பொருள். இறுதிப் போர் நடைபெற்றபோது பல நாடுகளின் செய்மதிகள் இங்கு நடந்த படுகொலைகளைத் மிகத்துல்லியமாகப் படம்பிடித்துவைத்துள்ளன. உலக நாடுகளிடம் இருக்கும் ஆதாரங்கள் மற்றும் ஆவணங்கள் தமிழ் மக்களின் சாட்சியங்களாக இருக்கின்றன. இதன்படி சரியான நீதி விசாரணை வேண்டும்.

இந்த நாட்டில் உங்களின் கலாசாரம், பண்பாடு, அடையாளம் என்பனவற்றை மதிக்கின்றோம். உங்களுடன் சேர்ந்து வரத் தயாராக இருக்கின்றோம். அதேபோன்று தமிழர்களுடைய தனித்துவம், அவர்களின் தேசிய அடையாளம், கலாசார அடையாளம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கான நீதியை வழங்கவேண்டும். அதற்குத் தயாராகுங்கள். இப்போது முக்கிய சாட்சியாக காணாமல் போனோரின் உறவினர்களின் போராட்டங்கள் மூவாயிரம் நாட்களையும் கடந்து வீதிகளில் நடக்கின்றன. அவற்றை கருத்தில் எடுத்து நீதிக்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும். உண்மையை வெளிக்கொண்டுவரப்படவேண்டும் - என்றார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரனியில் திரண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முன்வரவேண்டும்

## ஆனந்தசங்கரி கோரிக்கை



அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரனியில் திரண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முன் வர வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பதையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

தூய்மையானஅரசியலைமுன்னெடுத்தஒருவனாகநான் இருக்கின்றேன். தந்தை செல்வா, ஜிஜி.பொன்னம்பலம், தொண்டமான உருவாக்கிய கட்சிதான் தமிழர் விடுதலைக் கூட்டணி

இந்த தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை. அதற்கான பணமும் எங்களிடம் இல்லை இந்த தேர்தலில் எமது கட்சி போட்டியிடவில்லை.

நடைபெற உள்ள தேர்தல் தான் முக்கியமான ஒரு தேர்தலாக அமையும் இப்போது வெளியிடங்களில் இருந்து வந்து கோடிக்கணக்கிலே பணத்தை கொட்டி தீர்த்து இந்த தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். என்னுடன் பேரம் பேசியதாக கூட சொல்லுகின்றார்கள். என்னிடம் இவ்வாறு தேர்தலில் வீசி எறிய பணம் இல்லை.

ஆனால் அரசியலுக்காக இல்லாமல் அனைவருமே ஒன்று திரண்டு ஒரணியிலிருந்து தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முன் வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். 113

# 'கல்முனையில் சமயத் தீவிரவாதம்' என்னும் குற்றச்சாட்டு குறித்து மக்களுக்கு விளக்கம்

(பாறுக் ஷிஹான்)

'கல்முனையில் சமய தீவிரவாதம்' எனும் குற்றச்சாட்டு தொடர்பாக கல்முனையின்பிரதானபள்ளிவாசலான கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலும் , கல்முனை வாழ் அனைத்து மக்களும் கவலையுற்றிருப்பதுடன் மேற்படி விடயம் தொடர்பில் மிக அவதானமாகவும் இருக்கின்றோம். சமய தீவிரவாதம் தொடர்பாக இஸ்லாம் மார்க்கமும், முஸ்லிம்சமூகமும்,குறிப்பாககல்முனை வாழ் சிவில் சமூகமும் இக்கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருக்கின்றனர் என தெரிவித்து கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை அறிக்கையொன்றின் ஊடாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

அந்த அறிக்கையில் -

அண்மையில் நாடாளுமன்றத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரினாலும், பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளரினாலும் கிழக்கு மாகாணத்தில் , குறிப்பாக கல்முனையில் இஸ்லாமிய தீவிரவாதம் மேலோங்கி இருப்பதாகவும், அரசு இது விடயமாக கண்;காணித்துக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் கல்முனையின் தாய்ப் பள்ளிவாசலானகல்முனைமுஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலும் , கல்முனை வாழ் அனைத்து மக்களும் கவலையுற்றிருப்பதுடன் மேற்படி விடயம் தொடர்பில் மிக அவதானமாகவும் இருக்கின்றோம். சமய தீவிரவாதம் தொடர்பாக இஸ்லாம் மார்க்கமும், முஸ்லிம் சமூகமும் ,குறிப்பாக கல்முனை வாழ் சிவில்சமூகமும் இக்கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருக்கின்றனர்.

எனவேமேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டு தொடர்பாக கல்முனை பிரிவிற்கான உதவி பொலிஸ் அத்தியட்சகரை கடந்த 06.03.2025 அன்று சந்தித்து குறித்த விடயம் தொடர்பான பூரண விளக்கத்தினை எங்களுக்கு தருமாறும், குறித்த இஸ்லாமிய தீவிரவாதம் கல்முனையில் ஆதாரபூர்வமாக செயற்படுமாயின் அதனை முற்றிலும் இல்லாமலாக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை பாதுக்காப்பு பிரிவினர் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்றும், அதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் எமது ஊர் பள்ளிவாசல்களும், மக்களும் வழங்க தயாராகவுள்ளோம் எனும் உறுதிப்பாட்டை எழுத்து மூலமும் அறியப்படுத்திஉள்ளதோடுஇவ்விடயம் தொடர்பில் பொலிஸாரும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பள்ளிவாசலும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைதிட்டமிட்டுள்ளோம்.

இது தொடர்பாக மேலதிக கலந்துரையாடலுக்காக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அவர்களை நமது ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அழைத்து இருப்பதுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அவர்களின் தலைமையில் அனைத்து மாகாண, மாவட்ட பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கல்முனையின் சிவில் சமூக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்றிணையும் மிக விரைவில் ஏற்பாடு செய்து மேற்கூறப்பிட்ட விடயம் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேலும் கொழும்பிலுள்ள துணையுடன் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான உண்மைத்தன்மைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தயாரித்து அரசாங்கத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் முன்வைப்பதற்கான மேலதிக ஏற்பாடுகளையும் எமது நம்பிக்கையாளர் சபை முன்னெடுத்துவருகின்றது. எனவே மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் எமதூரின்தாய்ப்பள்ளிவாசல்விரைந்து செயற்பாட்டுக்கொண்டிருக்கிறது என்பதுடன் பொது மக்களாகிய தாங்களும் இவ்விடயத்திற்கு பூரண ஒத்துழைப்பைவழங்க வேண்டும்என்று அன்பாய் வேண்டிக்கொள்கின்றோம் என்று தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலினது வான்வழித் தாக்குதல்களுக்கு அரசு கடும் கண்டனம் தெரிவிக்கவேண்டும்

## மு. கா, தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தல்

இஸ்ரேலின் மிலேச்சத்தனமான இனப்படுகொலை , தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு மற்றும்அழிவுச்செயல்களைஇலங்கைஅரசாங்கம் வெளிப்படையாகக் கண்டிக்க முன்வர வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் புதன்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது –

சர்வதேசசட்டத்தைமீறி இஸ்ரேல் நடத்தியுள்ள அதிர்ச்சியூட்டும் வான்வழித் தாக்குதல்கள் மூலம் அந் நாட்டு சியோனிச ஆட்சியின் அப்பட்டமான போர் நிறுத்த மீறலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். முஸ்லிம்கள் நோன்பு நோற்று வரும் புனித ரமழான் மாதத்தில் காசாவில் 400 இற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்ட குண்டுவெடிப்புகளை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பித்து, இரண்டு மாத கால போர்நிறுத்தத்தை மீறியுள்ளமை எங்களால் வன்மையாகக் கண்டிக்கப்படுகின்றது. இஸ்ரேல் ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தத்தின் முதல் கட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

காசா மற்றும் பிராந்தியத்தின் பிற பகுதிகளில் அமைதியை சீரழிக்கும் காரியங்களில் அறவே ஆர்வமில்லாதிருக்கும் அப்பாவிப் பொதுமக்கள் மீது மிருகத்தனமான தாக்குதல்களையும் , இன ஒழிப்பு நடவடிக்கைகளையும் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வருகின்றது. யெமன், சிரியா மற்றும்லெபனான் ஆகியவற்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய அண்மைய தாக்குதல்களின் மூலம் பொதுமக்களையும், பெண்களையும் , சிறுவர்களையும் குழந்தைகளையும் காயப்படுத்துவதையும்,படுகொலைசெய்வதையும்,

நிவாரணப் பணியாளர்களை நோக்கி இடைவிடாமல்தாக்குதல்தொடுப்பதையும்நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். மக்களுக்கு வழங்கும் நிவாரண உதவிகளைக் கூட இஸ்ரேல் சட்டத்தை மீறி தொடர்ந்து தடுத்து வருகின்றது.

இஸ்ரேலின் கடுமையான நிலைப்பாட்டிற்கு அமெரிக்கா ஆதரவளிப்பது மிகவும் கவலையளிக்கின்றது, இது இஸ்ரேலின் தண்டனையிலிருந்து தப்பிக்கும் செயல்களை தீவிரப்படுத்துகிறது. இது அமைதிக்கானபாதையில் , இராணுவ மோதல்களை அதிகரிப்பதோடு பிராந்தியத்தின் இயல்பான ஆற்றல் திறனை கடுமையாகக்குறைமதிப்பீட்டுக்குஉட்படுத்துகிறது.

இஸ்ரேலிய சியோனிச ஆட்சியின் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா கையாண்டுவரும் தவறான கொள்கைகளுக்கு எதிராக அவசரமாக கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும், சமாதானப் பேச்சுகளுக்கு அழைப்பு விடுக்கவும் அரபுத் தலைவர்களை நாங்கள் வேண்டிக் கொள்கின்றோம்.

இஸ்ரேலிய சியோனிச ஆட்சி, சர்வதேச சட்டங்களை தொடர்ந்து மீறுவதையும், காசாவில் அது மேற்கொண்டுவருகின்ற மிலேச்சத்தனமான இனப்படுகொலை , தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு மற்றும்அழிவுச்செயல்களைஇலங்கைஅரசாங்கம் வெளிப்படையாகக் கண்டிக்க முன்வர வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இறைமையுள்ள அயல் நாடுகள் மீதான இஸ்ரேலின் அச்சுறுத்தல் ,அவற்றிற்கு ஏற்படுத்திவரும் பேரழிவு மற்றும் ஐ.நா. தீர்மானங்களை மீறிச் செயற்படுவது என்பவை சமமாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. சர்வதேச சட்டங்களை மீறிவருவதற்கும்,பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பதட்டங்களுக்கும் இஸ்ரேலை பொறுப்பேற்குமாறு இலங்கை அரசாங்கம் பாதுகாப்புக் கவுன்சிலிடம் முறையிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



# விபத்தில் சிக்கியது மதுபானம் ஏற்றிய பாரஊர்தி போத்தல்ளை எடுக்க மதுப்பிரியர்கள் முண்டியடிப்பு

அவிசாவளை - இரத்தினபுரி வீதியில் எஹலியகொட பிரதேசத்தில் மதுபான போத்தல்களை ஏற்றிச்சென்ற பார ஊர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது பார ஊர்தியில் ஏற்றிச்செல்லப்பட்ட





மதுபான போத்தல்கள் வீதியில் சிதறியுள்ளன.

இவ்வாறு வீதியில் சிதறிய மதுபான போத்தல்களை மதுப்பிரியர்கள் எடுத்துச்



செல்லும் காட்சிகள் புகைப்படங்களில் வெளியாகியுள்ளன.

# தென்கிழக்கு பல்கலை பெண்கள் விடுதி சிற்றுண்டிச் சாலைக்கு அபராதம் விதிப்பு

## சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றம் அதிரடி

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இறைச்சி கடைகள், இப்தாருக்கு சிற்றுண்டி உற்பத்தி செய்து விற்பனை செய்யும் கடைகள் உட்பட தென்கிழக்கு பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் உள்ள சிற்றுண்டிச்சாலை என்பன நேற்று (புதன்கிழமை) நோன்பு கால உணவுப் பாதுகாப்பின் நிமித்தம் பரிசோதிக்கப்பட்டன.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனை மேற்கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத இரு உணவகங்களுக்கும், தென்கிழக்கு பல்கலைக்கழக பெண்கள் விடுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலைக்கும் எதிராக, சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மூன்று நிறுவனத்திற்கும் சம்மாந்துறை நீதிவான்



நீதிமன்றத்தால் 15000, 10000, 5000 ரூபாக்கள்



என மொத்தமாக 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# புத்தளம் பாத்திமாமாணவி சாதிப்பு

(சியாஜ்)

அகில இலங்கை ரீதியில் பௌதீகவியல் ஒன்றியத்தால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட இளையோர் அறிவியல் ஒலிம்பியாட் போட்டியில் புத்தளம் பாத்திமா கல்லூரியின் சாதாரண தர மாணவி எம்.எச் அயிஷா அனத் வெள்ளிப்பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவருக்கான பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பல்கலைககழகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.






# இப்தார் ஒன்றுகூடல்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை நகர கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலய வருடாந்த இப்தார் ஒன்றுகூடல் நிகழ்வு ஆசிரியர் நலன்புரி குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிசாட் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ரமழான் சிந்தனையை பாடசாலை ஆசிரியர், மௌலவியுமான அஷ்ஷேக் ஜே.எம். நௌபாஸ் (நளீமி) நிகழ்த்தினார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்முனை கல்வி வலயத்தின் பணிப்பாளர் எம்.எஸ் .சஹுதுல் நஜீம் அவர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் மேலும் உலமாக்கள், அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், கல்முனை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் கே. லிங்கேஸ்வரன், கல்முனை கல்வி வலயத்தின் முன்னாள் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல், பிரதி கல்வி பணிப்பாளர்களான எம்.எச். ஜாபிர், ஏ.எச்.எம். பௌஸ், கோட்டக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம். றியால், ஓய்வு பெற்ற பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம். முக்தார், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர், கல்வி மான்கள், பிரதேச சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், அண்மைய பாடசாலை அதிபர், பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள் , பகுதி தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கும் ஜேர்மனியப் பெண்

மாத்தளை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜேர்மன் நாட்டுப் பெண் ஒருவர் களமிறங்குகிறார்.

இந்துப் பெண் இலங்கை குடியுரிமையைப் பெற்று தேர்தலில் போட்டியிட தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சுயேட்சைக் குழுவின் வேட்பாளராக கலேவெல பிரதேச சபையில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை ஜேர்மனிய பெண் நேற்று (புதன்கிழமை) செலுத்தியுள்ளார்.

தனது அரசியல் ஈடுபாட்டின் மூலம் இலங்கையில் நல்ல மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2025இல் வெளியிடப்பெற்றது